# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் அவர்களால்
2025 ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2025 மாச்சு மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமனத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

[6 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 90.00 தபாற் செலவு: ரூபா 150.00

இச்சட்டமூலத்தை WWW.documents.gov.lk எனும் இணையகத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

**சட்டமூலம் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் 144அ மற்றும் 144ஆ என்பவற்றை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தைத் திருத்துகின்றதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்:-

(அ) அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்குவதற்கு நீதிவானுக்குத் தத்துவமளித்தல்; அத்துடன்

(ஆ) ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் எச்சூழ்நிலைகளின்கீழ் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியம் ஒரு நீதிவானினால் இல்லாதாக்கப்படுதலாகாதோ அச்சூழ்நிலைகளைக் குறித்துரைத்தல்.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதுடன் 4 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந் தன்மையினதாகும்.

**வாசகம் 4**: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 241அ மற்றும் 241ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தைத் திருத்துகின்றதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்:-

(அ) அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்குவதற்கு மேல் நீதிமன்ற நீதிபதிக்குத் தத்துவமளித்தல்; அத்துடன்

(ஆ) ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவர் எச்சூழ்நிலைகளின்கீழ் நெரில் சமுகமளிக்கவேண்டிய அவசியம் ஒரு மேல் நீதிமன்ற நீதிபதியினால் இல்லாதாக்கப்படுதலாகாதோ அச்சூழ்நிலைகளைக் குறித்துரைத்தல்.

**வாசகம் 5** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 273அ முதல் 273ப வரையிலான புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தைத் திருத்துகின்றதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கு ஏற்பாடுகளைச் செய்வதாகும்:-

(அ) விசாரணையின்போது அல்லது விளக்கத்தின்போது சமகால கட்புல-செவிப்புல இணைப்பின்மூலம் சாட்சியொருவரின் தொலைவுச் சான்றுரையைப் பதிவதற்கு நீதிவானுக்கு அல்லது மேல் நீதிமன்ற நீதிபதிக்குத் தத்துவமளித்தல் ;

(ஆ) நீதிமன்றத்தில் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்காகவும் வருகை தருவதற்காகவும் அரசதுறையிலுள்ள நிபுணர்களுக்கு அழைப்புக்கட்டளை அனுப்பிவைக்கும்படி இயைபான நீதிமன்றத்தின் பதிவாளரைப் பணிப்பதற்குத் தோதான சந்தர்ப் பங்களில் நீதிவானுக்கு அல்லது மேல் நீதிமன்ற நீதிபதிக்குத் தத்துவமளித்தல்;

(இ) கையொப்பமிடப்பட்ட அறிக்கைகளை இலத்திரனியல்ரீதியில் கடத்துவதற்கு அத்தகைய நிபுணர்களை இயலச்செய்தல்; அத்துடன்

(ஈ) இலத்திரனியல்ரீதியில் நீதிமன்றத்தினாற் பெறப்பட்ட நிபுணரின் அறிக்கையைச் சான்றில் ஏல்தகவுடையதாக்குதல்.

**வாசகம் 6** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையில் புதிய படிவங்கள் 24 மற்றும் 25 என்பவற்றை உட்புகுத்துவதன்மூலம் அவ்வட்டவணையைத் திருத்துவதாகும்.

**குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)**

ச.வ.- ஓ. 5/2018

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்து வதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 144அ மற்றும் 144ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 144 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 144அ மற்றும் 144ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"விசேட சூழ்நிலைகளின் கீழ் சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்க வேண்டிய அவசியம் இல்லாதாக்கப் படலாம்

**144அ.** (1) இப்பிரிவின் (4) ஆம் உட் பிரிவினதும் 144ஆ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு, நீதிவானானவர், எந்தச் சந்தேகநபரொருவர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர் தொடர்பில் அத்தகைய நீதிவானின்முன்னர் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடங் கப்பட்டுள்ளனவோ அந்தச் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர், பின்வரு வனவற்றுக்காக நீதிமன்றத்தில் நேரில் சமுக மளிக்கவேண்டிய அவசியத்தை இல்லா தாக்கலாம்:-

(அ) தடுப்புக்காவற் காலப்பகுதியை நீடித்தல்;

(ஆ) பிணைக்கான விண்ணப்பமொன்றைக் கேட்டல்:

(இ) ஏதேனும் புலனாய்வு, ஏதேனும் குற்றவியல் விளக்கம், ஏதேனும் விசாரணை அல்லது வேறேதேனும் வழக்குநடவடிக்கை நடாத்தப்படுவதற்கு உதவுவதற்காக விண்ணப்பமொன்றைக் கேட்டல்; அல்லது

(ஈ) வேறேதேனும் நோக்கம்.

(2) மூன்றாம் உட்பிரிவிற் குறித்துரைக்கப் பட்டவாறு, இயைபான ஆளினாற் செய் யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, நீதிமன்றத்தில் சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்க வேண்டிய அவசியம், (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களில் ஏதே னும் ஒன்றின்மீது அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின்மீது அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத் தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்கலாமென நீதிவான் திருப்திப்படின், அவ்வாறு இல்லாதாக்கப்படலாம்.

(3) ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட் டப்பட்டவர் தொடர்பில் (2) ஆம் உட்பிரி வின்கீழான விண்ணப்பமொன்று பின்வரு வோரினால் செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி;

(ஆ) விடயத்துக்கேற்ப, சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தானே அல்லது அவரது சட்டத்தரணி;

(இ) இயைபான பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்;

(ஈ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவர் எம்மறியற்சாலையில் தடுத்து வைக்கப்படுகின்றாரோ அம்மறியற்சாலை யின் கண்காணிப்பாளர்; அல்லது

(உ) சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் எந்தத் தடுப்புக்காவல் இடத்தில்தடுத்துவைக்கப்படுகின்றாரோ அந்தத் தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்.

(4) நீதிவானானவர், பின்வரும் ஏதுக் களின்மீது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்கலாம்:-

(அ) சந்தேகநபரின் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரின் உயிருக்கான அச்சுறுத்தலொன்று அல்லது அவரது உயிருக்குப் பாரதூரமான தீங்குவிளையும் அச்சமொன்று உள்ளவிடத்து;

(ஆ) சந்தேகநபரினால் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரினால் புரியப்பட்டுள்ள தெனச் சார்த்தப்பட்ட தவறுக்குப் பொதுமக்களின் எதிர்விளைவானது சமாதானக் குலைவை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் கொண்டதாக உள்ளவிடத்து;

(இ) சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் தடுப்புக்காவலிலி ருந்து தப்பியோடும் அல்லது தடுப்புக் காவலிலிருந்து தன்னிச்சையற்ற முறையில் அகற்றப்படும் சாத்தியக் கூறொன்று உள்ளவிடத்து;

(ஈ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவர் நீதிமன்ற வழக்குநடவடிக்கை களுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற சாத்தியக்கூறொன்று உள்ளவிடத்து;

(உ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவர், உயிருக்கு ஆபத்தான ஒரு தொற்றுநோய் அல்லது தொடுநோய் பரவுவதனைத் தடுப்பதற்கென ஏதே னும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தனிமைப்படுத்தப்பட்டவொருநிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவிடத்து;

(ஊ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி வலுக் கட்டாயப் புனர்வாழ்வளித்தலுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள சந் தேகநபரொருவர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரொருவர் நேரில் சமுக மளிக்கவேண்டிய அவசியம், அத்தகைய சந்தேகநபரின் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரின் புனர்வாழ்வளித்தல் நடைமுறைக்கு இடையீடு விளைவிக்கு மிடத்தும், சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் சமுகமளிக்கவேண்டிய அவசியத்துக்கானநோக்கம்தடுப்புக் காவற் காலப்பகுதியை நீடிப்பதற்கானதாக உள்ளவிடத்தும; அல்லது

(எ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவர் நேரில் சமுகமளிக்கவேண்டி யமை, அப்போதைக்கு நிலவுகின்ற உலகம்பரவுநோய் அல்லது வேறு ஒத்த நிலைமை காரணமாகப் பொதுமக்கள் காப்புக்கும் சுகாதாரத்துக்கும் அச்சுறுத்த லொன்றை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் கொண்டதாக உள்ளவிடத்து:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவோர் ஏது இல்லாதொழிந்துள்ளதென நீதிவான் அபிப்பி ராயப்படுமிடத்து, அவர், சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டுமெனப் பணிக்க

லாமென்பதுடன் இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அவர் சமுக மளிக்கின்றமையை வலுவுறுத்தலாம்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிவானொருவர், ஒரு சந்தேகநபர் அல்லது ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்குமிடத்து, அதற்கான காரணங்கள் எழுத்தில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்,-

(அ) ஒரு சட்டத்தரணிமூலம் நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அவரது முறையீட்டைச் செய்வதற்கும் அத்தகைய சந்தேகநபரினால் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரினால் அவரது சார்பில் அல்லது அவர் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் அனுமதிக்கப்படுதலும் வேண்டும்.

(6) (அ) நீதிவான் நீதிமன்றப் பதிவாளர், சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரது முறையீட்டைச் செய்வதனை வசதிப்படுத்துவதற்கும் வழக்குநடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் நீதிமன்றத்தில் அவசியமான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் எத்தடுப்புக்காவல் இடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளாரோ அத்தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அல்லது அத்தகைய ஆள் எம்மறியற் சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளாரோ அம்மறியற்சாலையின் கண்காணிப்பாளர் நீதிவான் நீதிமன்றப் பதிவாளரின் கலந்தா லோசனையுடன், தடுத்துவைக்கப்பட்டுள்ள அத்தகைய சந்தேகநபருக்கு அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவருக்குப் பந்தி (அ) விற் குறிப்பீடு செய்யப்பட்டவாறு சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அவரது முறை யீட்டைச் செய்வதற்கும் நீதிமன்றத்தின் வழக்குநடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் அவசியமான வசதிகளை வழங்குதல் வேண்டும்.

(7) அத்தகைய சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக் காவல் இடம் அல்லது மறியற்சாலை அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானின் நீதிமுறைப் பிரிவினுள் இருக்குமிடத்து, அத்தகைய நீதிவான் வழக்கைக் கூப்பிட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தா மல் அத்தகைய தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு தடுத்துவைக் கப்பட்ட சந்தேகநபரின் அல்லது ஒரு குற்றஞ் சாட்டப்பட்டவரின் நல்வாழ்வுபற்றி ஆராய்தலும் வேண்டும்.

(8) சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவரின் தடுப்புக்காவல் இடம் அல்லது மறியற்சாலை அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானின் நீதிமுறைப்

பிரிவிற்கு வெளியே அமைந்துள்ளவிடத்து, இயைபான நீதிமுறைப் பிரிவின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் உடனடியாகத் தொடர்புகொள்வதுடன், (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்துக்காக, சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

(9) சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடம் அல்லது மறியற்சாலை எந்த நீதிவானின் நீதிமுறைப் பிரிவில் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடுவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, வேறெவரேனும் நீதிவானுடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் உடனடியாகத் தொடர்புகொள்வதுடன், (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்துக்காகச் சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

(10) எட்டாம் அல்லது (9) ஆம் உட்பிரிவின் கீழ் எந்த நீதிவானுடன் தொடர்பாடப்பட்டதோ அந்த நீதிவான், சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியறியற்சாலையைப் பார்வையிடும்படி அவரைக் கோருகின்ற படிவம் பெறப்பட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய இடத்தைப் பார்வையிடுதல் வேண்டுமென்பதுடன் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்க வேண்டிய அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானுக்கு, அத்தகைய பார்வையிடுகையிலிருந்து ஒருவாரத்தினுள் அதற்கென விதித்துரைக்கப்பட்ட

படிவத்தில் அத்தகைய பார்வையிடுகைபற்றி எழுத்தில் அறிக்கையிடுதலும் வேண்டும்.

(11) ஏழாம், (8) ஆம் அல்லது (9) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடுகின்ற நீதிவான்முன்னர் அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட அத்தகைய எவரேனும் சந்தேகநபரை அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரை கொணருவதும் அத்தகைய நீதிவானினால் தேவைப்படுத்தப்பட்ட வசதிகளை அவருக்கு வழங்குவதும் தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினது அல்லது மறியற்சாலையின் கண்காணிப்பாளரினது கடமையாதல் வேண்டும்.

(12) ஏழாம், (8) ஆம் அல்லது (9) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஒரு சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் நல்வாழ்வு பற்றி ஆராய்வதற்கு நீதிவானொருவர் தடுப்புக் காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடுமிடத்து, சந்தேகநபரை அல்லது ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணி ஒருவர் அத்தகைய பார்வையிடுகை நேரத்தில் சமுகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

எந்தச் சூழ்நிலைகளின்கீழ் ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்;;க வேண்டிய அவசியம் இல்லாதாக்கப்படுதலாகாதென்பது

**144ஆ.** (1) நீதிவானானவர், பின்வரும் சந்தர்ப்பங்களில் 144அ என்னும் பிரிவின்கீழ் ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர், நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்குதலாகாது:-

(அ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு பொலிசு அலுவலர், ஒரு சுங்க அலுவலர், ஒரு மதுவரி அலுவலர் அல்லது ஒரு காட்டு அலுவலரின் கட்டுக்காப்பிலிருந்து

அல்லது தடுப்புக்காவல் இடத்திலிருந்து முதற்றடவையாக நீதிவானொருவர் முன்னர் கொணரப்படுமிடத்தும் அத்த கைய நேரடித் தோற்றுகை, ஏற்புடையற் பாலதான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கட்டாயமானதாகவிருக்குமிடத்தும்;

(ஆ) தடுப்புக்காவற் காலப்பகுதியை நீடிப் பதற்காக நீதிவானொருவர் முன்னர் கொணரப்பட்ட எவரேனும் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர், கட்டுக் காப்பில் அல்லது தடுப்புக்காவல் இடத்தில் தடுத்துவைக்கப்படுகையில் அவர் தாக்குதல், சித்திரவதை அல்லது மனித உரிமைகளின் மீறுகையாக அமைகின்ற வேறேதேனும் செயல் அல்லது செய்யா மைக்கு அமைந்தவராக்கப்பட்டார் அல் லது தாக்குதல், சித்திரவதை அல்லது மனித உரிமைகள் மீறுகையொன்றாக அமைகின்ற வேறேதேனும் செயல் அல்லது செய்யாமைக்கு அமைந்த வராக்கப்படுவாரென அச்சுறுத்தப்பட்டார் என முறைப்பாடொன்றைச் செய்துள்ள விடத்து;

(இ) அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் சித்தசுவாதீன மற்றவரான ஆளொருவராகவிருக்குமிடத்து;

(ஈ) விடயத்தின் சூழ்நிலையில் அல்லது நீதிநலன்கருதி சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசிய மானது விரும்பத்தக்கதென நீதிவான் அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது அப்பொருள்பட்ட விண்ணப்பமொன்றின் அடிப்படையின்மீது திருப்திப்படுமிடத்து;

(உ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் குற்றச்சாட்டுப்பத்திரத்தை அல்லது முடிவுரையைப் பெறுவதற்காக ஒரு சட்டத்தரணியினால் அவர் பிரதி நிதித்துவப்படுத்தப்படுவதற்குக் குற்றஞ் சாட்டப்பட்டவர் சம்மதிக்காதவிடத்து:

ஆயின், குற்றச்சாட்டுப்பத்திரத்தை அல்லது முடிவுரையைப் பெறுவதற்காக ஒரு சட்டத்தரணியினால் அவர் பிரதி நிதித்துவப்படுத்தப்படுவதற்குக் குற்றஞ் சாட்டப்பட்டவர் சம்மதிப்பின், அவர் எந்த இடத்தில் தடுத்துவைக்கப்படு கின்றாரோ அந்த இடத்திற்குப் பொறுப் பாகவுள்ள அலுவலரினூடாக அல் லது மறியற்சாலையின் கண்காணிப் பாளர் ஊடாகக் குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு அதன் பிரதியொன் றைச் சேர்ப்பிப்பதற்கான கட்டளை யொன்றை ஆக்குதலும், குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு அப்பிரதி சேர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை உறு திப்படுத்தியதன்மேல் அத்தகைய நிகழ்வைப் பதிவேட்டில் தக்கவைத் திருத்தலும் நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

(2) நீதிவானானவர், 192 ஆம் பிரிவின் ஏற்பாடு களுக்கமைய, குற்றஞ் சாட்டப்பட்டவர் விளக்கத்தில் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குச் சட்டத் தரணியொருவருக்குச் சம்மதமளித்திருந்து அத்தகைய சட்டத்தரணிக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் நீதிமன்றத்திலும் அவர் தடுத்துவைக்கப்பட்டிருக் கும் இடத்திலும் அல்லது மறியற்சாலையிலும் தனிப்பட்ட தொடர்பாடலுக்குப் போதிய வசதிகள் அளிக்கப்பட்டிருந்தால் ஒழிய, குற்றஞ் சாட்டப்பட்டவரொருவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்குதலாகாது.

(3) நீதிவானானவர், 192 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, குற்றஞ்சாட்டப்பட்டவரின் அல்லது அவரது சட்டத்தரணியின் வெளிப்படையான சம்மதமின்றி, விளக்கம் தொடங்கியபின்னர் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்க வேண்டிய அவசியத்தை இல்லாதாக்கு தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "போய்விட்டது எனவும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "போய்விட்டது எனவும்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(இ) அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்க வேண்டிய அவசியம், பிரிவுகள் 241அ மற்றும் 241ஆ என்பவற்றின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு இல்லாதாக்கப்படுதல் வேண்டும் எனவும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 241அ மற்றும்241ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத் தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 241அ மற்றும் 241ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"விசேட சூழ்நிலை களின்கீழ் குற்றஞ்சாட்டப் பட்டவர் நேரில் சமுகமளிக்க வேண்டிய அவசியம் இல்லாதாக்கப் படலாம்

**241அ.** (1) இயைபான நீதிமுறை வலயத்தின் மேல் நீதிமன்ற அமர்வுகளில் தலைமைதாங்கும் மேல் நீதிமன்ற நீதிபதி இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினதும் 241ஆ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய நீதிமன்றத்தின்முன்னர் யூரர்மாருடனோ

அல்லது யூரர்மாரின்றியோ, எந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பில் விளக்கம் முடிவுறாதுள்ளதோ அல்லது தொடங்கப் பட்டுள்ளதோ அந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்கலாம்.

(2) மூன்றாம் உட்பிரிவிற் குறித்துரைக் கப்பட்டவாறு, இயைபான ஆளினாற் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களுள் ஒன்றின்மீது அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின்மீது அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியம் இல்லா தாக்கப்படலாமென நீதிபதி திருப்திப்படின், குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியம் அவ்வாறு இல்லாதாக்கப்படலாம்.

(3) ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்ப மொன்று பின்வருவோரினால் செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி;

(ஆ) விடயத்துக்கேற்ப, குற்றஞ்சாட்டப்பட்ட வர் தானே, அல்லது அவரது சட்டத் தரணி;

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவர் எம்மறியற் சாலையில் தடுத்துவைக்கப்படுகின் றாரோ அம்மறியற்சாலையின்கண் காணிப்பாளர்; அல்லது

(ஈ) தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப் பாகவுள்ள அலுவலர்.

(4) நீதிபதியானவர், பின்வரும் ஏதுக்களின்மீது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்கலாம்:-

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் உயிருக்கான அச்சுறுத்தலொன்று அல்லது அவரது உயிருக்குப் பாரதூரமான தீங்குவிளையும் அச்சமொன்று உள்ளவிடத்து;

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவரினால் புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்ட தவறுக்குப் பொதுமக்களின் எதிர்விளைவானது சமாதானக் குலைவை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் கொண்டதாக உள்ளவிடத்து;

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுப்புக் காவலிலிருந்து தப்பியோடும் அல்லது தடுப்புக்காவலிலிருந்து தன்னிச்சையற்ற முறையில் அகற்றப்படும் சாத்தியக்கூறொன்று உள்ளவிடத்து;

(ஈ) குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்ற வழக்குநடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற சாத்தியக்கூறொன்று உள்ளவிடத்து;

(உ) குற்றஞ்சாட்டப்பட்டவர், உயிருக்கு ஆபத்தான ஒரு தொற்றுநோய் அல்லது தொடுநோய் பரவுவதனைத் தடுப்பதற்கென ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தனிமைப்படுத்தப்பட்டவொரு நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவிடத்து;

(ஊ) குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்கவேண்டியமை, அப்போதைக்கு நிலவுகின்ற உலகம்பரவுநோய் அல்லது வேறு ஒத்த நிலைமை காரணமாகப் பொதுமக்கள் காப்புக்கும் சுகாதாரத்துக்கும் அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் கொண்டதாக உள்ளவிடத்து:

ஆயின், இவ்வுட்பிரிவிற் குறித்துரைக்கப் பட்டவோர் ஏது இல்லாதொழிந்துள்ளதென நீதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, அவர், குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்க வேண்டுமெனப் பணிக்கலாமென்பதுடன் இதனகத்துமுன்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அவர் சமுகமளிக்கின்றமையை வலுவுறுத்தலாம்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் மேல் நீதிமன்ற நீதிபதியொருவர், ஒரு குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லா தாக்குமிடத்து, அதற்கான காரணங்கள் எழுத்தில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர்,-

(அ) ஒரு சட்டத்தரணிமூலம் நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அவரது முறையீட்டைச் செய்வதற்கும் அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவரினால் அவரது சார்பில் அல்லது அவர் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கை களை அவதானிப்பதற்கும் அனுமதிக் கப்படுதலும் வேண்டும்.

(6) (அ) மேல் நீதிமன்றப் பதிவாளர், குற்றஞ்சாட்டப்பட்டவர் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரது முறையீட்டைச் செய்வதற்கும் வழக்குநடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் நீதிமன்றத்தில் அவசியமான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவர் எத்தடுப்புக் காவல் இடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளாரோ அத்தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் அல்லது அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் எம்மறியற்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளாரோ அம்மறியற்சாலையின் கண்காணிப்பாளர் மேல் நீதிமன்றப் பதிவாளரின் கலந்தாலோசனையுடன், தடுத்துவைக்கப்பட்டுள்ள அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பந்தி (அ) விற் குறிப்பீடு செய்யப்பட்டவாறு சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அவரது முறையீட்டைச் செய்வதற்கும் நீதிமன்றத்தின் வழக்குநடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் அவசியமான வசதிகளை வழங்குதல் வேண்டும்.

(7) அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடம், அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்க வேண்டிய அவசியத்தை இல்லாதாக்கிய நீதிபதியின் நீதிமுறைப் பிரிவினுள் இருக்குமிடத்து, இயைபான நீதிமுறைப் பிரிவில் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் உடனடியாகத் தொடர்புகொண்டு வழக்கைக் கூப்பிட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடுதவதற்கும் அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரின் நல்வாழ்வுபற்றி ஆராய்வதற்கும் அவரைக் கோருதல் அத்தகைய நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(8) குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக் காவல் இடம் அல்லது மறியற்சாலை அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்கிய நீதிபதியின் நீதிமுறைப் பிரிவிற்கு வெளியே அமைந்துள்ளவிடத்து, இயைபான நீதிமுறைப் பிரிவின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானுடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் உடனடியாகத் தொடர்புகொள்வதுடன், (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்துக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடத்தைப் பார்வையிடும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(9) குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடம் அல்லது மறியற்சாலை எந்த நீதிவானின் நீதிமுறைப் பிரிவில் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் தடுப்புக்காவல் இடத்தைப் பார்வையிடுவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, வேறெவரேனும் நீதிவானுடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் உடனடியாகத் தொடர்புகொள்வதுடன், (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்துக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

(10)ஏழாம்,(8)ஆம்அல்லது(9)ஆம் உட்பிரிவின்கீழ் எந்த நீதிவானுடன் தொடர்புகொள்ளப்பட்டதோ அந்த நீதிவான், குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடும்படி அவரைக் கோருகின்ற படிவம் பெறப்பட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய இடத்தைப் பார்வையிடுதல் வேண்டுமென்பதுடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை

இல்லாதாக்கிய நீதிபதிக்கு, அத்தகைய பார்வையிடுகையிலிருந்து ஒருவாரத்தினுள் அதற்கென விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய பார்வையிடுகைபற்றி எழுத்தில் அறிக்கையிடுதலும் வேண்டும்.

(11) ஏழாம், (8) ஆம் அல்லது (9) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தடுப்புக்காவல் இடத்தை அல்லது மறியற்சாலையைப் பார்வையிடுகின்ற நீதிவான்முன்னர் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட அத்தகைய எவரேனும் குற்றஞ்சாட்டப்பட்டவரை கொணருவதும் அத்தகைய நீதிவானினால் தேவைப் படுத்தப்பட்ட வசதிகளை அவருக்கு வழங்குவதும் தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினது அல்லது மறியற்சாலைக் கண்காணிப்பாளரினது கடமையாதல் வேண்டும்.

(12) ஏழாம், (8) ஆம் அல்லது (9) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஒரு குற்றஞ்சாட்டப் பட்டவரின் நல்வாழ்வுபற்றி ஆராய்வதற்கு நீதிவானொருவர் தடுப்புக்காவல் இடத்தைப் பார்வையிடுமிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணி ஒருவர் அத்தகைய பார்வையிடுகை நேரத்தில் சமுகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

*எந்தச்சூழ்நிலைகளின்கீழ் நேரில் சமுகமளிக்க வேண்டிய அவசியம் இல்லாதாக்கப்படுதலாகா தென்பது*

**241ஆ.** (1) மேல் நீதிமன்ற நீதிபதி, 241அ என்னும் பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் நீதிமன் றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசி யத்தை இல்லாதாக்குதலாகாது:-

(அ) மேல் நீதிமன்ற நீதிபதியின்முன்னர் கொணரப்பட்ட எவரேனும் குற்றஞ்சாட் டப்பட்டவர், தடுப்புக்காவல் இடத்

தில் அல்லது மறியற்சாலையில் தடுத்துவைக்கப்படுகையில் அவர் தாக்குதல், சித்திரவதை அல்லது மனித உரிமைகளின் மீறுகையொன்றாக அமைகின்ற வேறேதேனும் செய லுக்கு அல்லது செய்யாமைக்கு அமைந்தவராக்கப்பட்டார் அல்லது தாக்குதல் அல்லது சித்திரவதை அல்லது மனித உரிமைகள் மீறுகையொன்றாக அமைகின்ற வேறேதேனும் செயல் அல்லது செய்யாமைக்கு அமைந்தவ ராக்கப்படுவாரென அச்சுறுத்தப் பட்டாரென முறைப்பாடொன்றைச் செய்துள்ளவிடத்து;

(ஆ) அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் சித்தசுவாதீனமற்றவரான ஆளொரு வராகவிருக்குமிடத்து;

(இ) மேல் நீதிமன்ற நீதிபதி, அப்பயன்படச் செய்யப்பட்டவொரு விண்ணப்பத்தின் அடிப்படையில், விடயத்தின் சூழ்நிலையில் அல்லது நீதிநலன்கருதி குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத் தில் நேரில் சமுகமாயிருப்பது விரும் பத்தக்கதென அபிப்பிராயப்படுமிடத்து அல்லது திருப்திப்படுமிடத்து;

(ஈ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் குற்றப்பத்திரத்தை அல்லது முடிவு ரையைப் பெறுவதற்காகக் குற்றஞ் சாட்டப்பட்டவர் தாம் சட்டத்தரணி யொருவரினால் பிரதிநிதித்துவப்படுத் தப்படுவதற்குச் சம்மதிக்காதவிடத்து:

ஆயின், குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றப்பத்திரத்தை அல்லது முடிவு ரையைப் பெறுவதற்காக தாம் ஒரு சட்டத்தரணியினால் பிரதிநிதித்

துவப்படுத்தப்படுவதற்குச் சம்மதித்தால், குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுத்து வைக்கப்படும் இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினூடாக அல்லது மறியற்சாலையின் கண்காணிப்பாளர் ஊடாக அவருக்கு அதன் பிரதியொன்றைச் சேர்ப்பிப்பதற்குக் கட்டளையொன்றை ஆக்குவதும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அப் பிரதி சேர்ப்பிக்கப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தியதன்மேல் அத்தகைய நிகழ்வைப் பதிவேட்டில் தக்க வைப்பதும் மேல்நீதிமன்ற நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) பிரிவு 241 இன் ஏற்பாடுகளுக்கமைய, மேல் நீதிமன்ற நீதிபதி, குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர், விளக்கத்தில் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒரு சட்டத்தரணிக்குச் சம்மதமளித்து அத்தகைய சட்டத்தரணிக்கும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் நீதிமன்றத்திலும் அவர் தடுப்புக்காவல் இடத்திலும் அல்லது மறியற்சாலையிலும் தனிப்பட்ட தொடர்பாடலுக்காகப் போதிய வசதிகள் அளிக்கப்பட்டிருந்தாலொழிய, அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்குதலாகாது.

(3) பிரிவு 241 றின் ஏற்பாடுகளுக்கமைய, மேல் நீதிமன்ற நீதிபதி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் அல்லது அவரது சட்டத்தரணியின் வெளிப்படையான சம்மதமின்றி விளக்கம் தொடங்கியபின்னர், குற்றஞ்சாட்டப்பட்டவரொருவர் நேரில் நீதிமன்றத்தில் சமுகமளிக்கவேண்டிய அவசியத்தை இல்லாதாக்குதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 273அ, 273ஆ, 273இ, 273ஈ, 273உ, 273ஊ, 273எ, 273ஏ, 273ஐ, 273ஒ, 273ஓ, 273ஔ, 273க, 273ங, 273ச, 273ஞ, 273ட, 273ண, 273த, 273ந மற்றும் 273ப என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 273 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இவை அச்சட்டவாக்கத்தின் 273அ, 273ஆ, 273இ, 273ஈ, 273உ, 273ஊ, 273எ, 273ஏ, 273ஐ, 273ஒ, 273ஓ, 273ஔ, 273க, 273ங, 273ச, 273ஞ, 273ட, 273ண, 273த, 273ந மற்றும் 273ப என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"விளக்கத்தின் போது அல்லது விசாரணையின் போது சமகாலத் துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியை விசாரணை செய்தல்

**273அ.** (1) பிரிவுகள் 272, 273 என்பவற்றின் மற்றும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான்,-

(அ) (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக் கப்பட்டவாறாக, இயைபான ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல்; அல்லது

(ஆ) நீதி நலன்கருதி அதன் சொந்தப் பிரேரணையின்மீது,

மற்றும் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே தொலைவுப் புள்ளியிலுள்ளவோர் அமைவிடத்திலிருந்து சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் சான்று அளிக்கப்படலாமெனப் பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்ப மொன்று-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால்;

(ஆ) இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால்;

(இ) 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கருத்துக்குட்பட, ஒரு சாட்சியை அல்லது குற்றச்செயலொன்றுக்குப் பலியாக்கப்பட்டவரைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையினால்;

(ஈ) தடுப்புக்காவல் இடமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினால்; அல்லது

(உ) விடயத்துக்கேற்ப, குற்றஞ்சாட்டப்பட்டவரினால் அல்லது அவரது சட்டத்தரணியினால்,

செய்யப்படலாம்.

(3) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், (1) ஆம் உட்பிரிவின்கீழான பணிப்பொன்றை வழங்குமுன்னர், விடயத்துக்கேற்ப, குற்றவழக்குத் தொடுநரின் அல்லது எதிர்வாதத்தினரின் அல்லது சாட்சியின் எவையேனும் கரிசனைகளை அல்லது ஆட்சேபனைகளைக் கவனத்துட் கொள்ளுதல் வேண்டும்.

(4) பின்வருவனபற்றி மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் திருப்திப்பட்டாலொழிய, மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் (1) ஆம் உட்பிரிவின்கீழான பணிப்பொன்றை வழங்குதலாகாது:-

(அ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம்பற்றி எல்லாத் திறத்தவர்களும் அறிவித்தல் பெற்றிருந்தனர்;

(ஆ) பின்வருவனவற்றை இயலச்செய்து சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பு மற்றும் அத்தகைய வேறு வசதிகள் கிடைக்கக்கூடியனவாகவுள்ளன அல்லது நியாயமானமுறையில் அவற்றைக் கிடைக்கக்கூடியனவாக்க முடியும்:-

(i) நீதிமன்றப்புள்ளியிலுள்ள ஆட்கள், சான்றளிக்கப்படும் தொலைவுப்புள்ளியிலான வழக்கு நடவடிக்கைகளில் பங்குபற்று கின்ற வேறெல்லா ஆட்களையும் காண்பதற்கும் கேட்பதற்கும்; அத்துடன்

(ii) சான்றளிக்கப்படுகின்ற தொலை வுப்புள்ளியிலுள்ள ஆட்கள், நீதிமன்றப்புள்ளியிலான வழக்கு நடவடிக்கைகளில் பங்குபற்று கின்ற வேறெல்லா ஆட்களையும் பார்க்கமுடியும் மற்றும் கேட்க முடியும்;

(இ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அழைக்கப்படு வதற்கு நாடப்பட்ட சாட்சியை சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக விசாரணை செய்ய முடியும் மற்றும் சான்றைப் பதிய முடியும்; அல்லது

(ஈ) அத்தகைய பணிப்பு, வழக்குநடவடிக்கை களுக்கான ஒவ்வொரு திறத்தவருக்கும் நியாயமானதாகவிருத்தல் அல்லது நீதி நிருவாக நலனுக்காகவிருத்தல்.

சமகாலத்துக்குரிய கட்புல-செவிப் புல இணைப்பி னூடாக ஒரு சாட்சியை அழைப்பதற் கான விண்ணப்பம்

**273ஆ.** (1) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியை அழைப்பதற்கான விண்ணப்பமொன்றைச் செய்கின்ற குற்றவியல் வழக்குநடவடிக்கை யொன்றிற்கான ஒவ்வொரு திறத்தவரும், தொலைவுப்புள்ளியிலிருந்து சான்றளிக்கின்ற சாட்சியை அடையாளங்காணுதல், சான்ற ளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மொழி, சாட்சியின் அமைவிடம் மற்றும் எந்தத் தொலைவுப்புள்ளியிலிருந்து சாட்சியினால் சான்றளிக்கப்படவேண்டுமோ அந்தத் தொலைவுப்புள்ளி தொடர்பான விபரங்கள் என்பனவற்றை மற்றைய திறத்தவருக்கான அறிவித்தலின்பின்னர் நீதிமன்றத்தில் கோப்பிடுதல் அல்லது கோப்பிடச் செய்தல் வேண்டும்.

(2) சாட்சி ஒவ்வொருவரும் தானே திரையில் வாக்குமூலமளிக்கப்போகின்ற அதே ஆளென, மற்றைய திறத்தவருக்கான சத்தியக்கடுதாசியொன்றின் பிரதியொன்றுடன், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பொன்றினூடாகச் சான்றளிக்கு முன்னர் அத்தகைய சத்தியக்கடுதாசியைக் கோப்பிடுதல் வேண்டும்:

ஆயின், சாட்சி ஒரு சிறுவராகவிருக்குமிடத்தும், மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் அத்தகைய சிறுவராகவுள்ள சாட்சியின் அடை யாளங்காணலுடன் திருப்திப்படுமிடத்தும், சத்தியக் கடுதாசியொன்றைக் கோப்பிடுகின்ற அத்தகைய தேவைப்பாட்டை அவர் இல்லாதாக்கலாம்.

(3) ஓர் அரசாங்க நிறுவனத்தில் தொழிலுக் கமர்த்தப்பட்டுள்ள சாட்சியொருவர்தவிர, இலங்கை யிலுள்ள சாட்சியொருவரை சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அழைப்ப தற்கு விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, விண்ணப்பத்தைச் செய்கின்ற திறத்தவர், பொருத்த மான ஆளொருவரை நீதிமன்றம் ஆணையாளராக

நியமித்தாலொழிய, 273இ என்னும் பிரிவின் கீழ் ஆணையாளராக நியமிக்கப்பட வேண்டிய ஆளின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் அல்லது இலத்திரனியல் அஞ்சல் முகவரிகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக இலங்கைக்கு வெளியேயுள்ள சாட்சியொருவரை அழைப்பதற்கு விண்ணப்ப மொன்று செய்யப்படுமிடத்து, விண்ணப்பத்தைச் செய்கின்ற திறத்தவர், இராஜதந்திர அலுவல ரொருவரை 273இ என்னும் பிரிவின்கீழ் ஆணையாளராக நியமிக்கும் நோக்கத்துக்காக உயர் ஸ்தானிகராயத்தின், தூதரகத்தின் அல்லது காவற்றூதலுவலகத்தின் முகவரி, தொலைபேசி இலக்கம் அல்லது இலத்திரனியல் அஞ்சல் முகவரி என்பனவுட்பட, உயர் ஸ்தானிகராயலம், தூதரகம் அல்லது காவற்றூதலுவலகத்தின் விபரங்களை நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும்.

சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப் பினூடாக ஒரு சாட்சியை விசாரணை செய்வதற்காக ஆணையாள ரையும் நீதிமன்ற அலுவலரையும் நியமித்தல்

**273இ.** (1) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், சமகாலத்துக்குரிய நீதிமன்றம், கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியின் விசாரணையை ஒருங்கிணைப்பதற்கு-

(அ) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொலைவுப்புள்ளியிலுள்ள ஆணையாளரொருவரையும்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "நீதிமன்ற அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நீதிமன்றப் புள்ளியிலுள்ள நீதிமன்ற அலுவலரொருவரையும்,

நியமித்தல் வேண்டும்.

(2) பதிவாளர் அல்லது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் மேல் நீதிமன்ற நீதிமன்ற

நீதிபதியினால் அல்லது நீதிவானால் நியமிக்கப்பட்ட நீதிமன்றத்தின் அலுவலரொருவர் நீதிமன்ற அலுவலராகவிருத்தல் வேண்டும்.

(3) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சாட்சி இலங்கையில் வதியுமிடத்து அல்லது உள்ளவிடத்து, மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் தொலைவுப்புள்ளியிலுள்ள ஆணையாளராகச் சட்டத்தரணியொருவரை நியமிக்கலாம்.

(4) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல வசதி இலங்கையிலுள்ள ஏதேனும் அரசாங்க நிறுவனத்தில் கிடைக்கக்கூடியதாகவிருப் பதுடன் அழைக்கப்படவேண்டிய சாட்சி அத்தகைய நிறுவனத்தின் ஊழியரொரு வராகவுமிருக்குமிடத்து, அத்தகைய நிறுவனத்தின் தலைவர், எவரேனும் சிரேட்ட நிறைவேற்று அலுவலர் அல்லது அத்தகைய நிறுவனத்தின் தலைவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அந்நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் சிரேட்ட நிறைவேற்று அலுவலர் அல் லது சட்டத்தரணியொருவர் தொலைவுப்புள்ளியி லுள்ள ஆணையாளராகவிருத்தல் வேண்டும்.

(5) எவரேனும் சாட்சி, சுகவீனம் அல்லது உடற்றகுதியீனம் காரணமாகத் தொலைவுப் புள்ளிக்கு வருகைதர இயலாதவராக உள்ளாரென ஆணையாளர் திருப்திப்படுமிடத்து, தொலைவுப் புள்ளியில் நியமிக்கப்பட்ட ஆணையாளர், சாட்சியின் வீட்டுக்கு அல்லது சாட்சி வதியும் வேறேதேனும் இடத்துக்கு விஜயம்செய்து நீதிமன்றப்புள்ளியிலுள்ள மேல் நீதிமன்ற நீதிபதியின் அல்லது நீதிவானின் ஏதேனும் மேலதிகப் பணிப்புக்கமைய, சமகாலத்துக் குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அத்தகைய சாட்சியின் விசாரணையை ஒருங்கிணைக்கலாம்.

ஆணை சேர்ப்பித்தல்

**273ஈ.** (1) இலங்கையில் வதிகின்ற சாட்சியொருவரை சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அழைப்பதற்குப் பணிக்கின்ற மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் பதிவஞ்சல், விரைதூதர் சேவை அல்லது இலத்திரனியல் வழிவகைகள் என்றவகையாகத் தொலைவுப்புள்ளியிலுள்ள அத்தகைய ஆணையாளருக்கு அத்தகைய பணிப்பின் பிரதியுடன் சேர்த்து ஆணையொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அழைக்கப்படவேண்டிய சாட்சி ஓர் அரசாங்க நிறுவனத்தின் ஊழியரொருவராக உள்ளவிடத்து, அத்தகைய ஆணை, பதிவஞ்சல், விரைதூதர் சேவை அல்லது இலத்திரனியல் வழிவகைகள் என்ற வகையாக அத்தகைய நிறுவனத்தின் தலைவருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(3)(அ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அழைக்கப்படவேண்டிய சாட்சி இலங்கைக்கு வெளியே உள்ளவிடத்து, நீதிமன்றமானது, இலங்கைக்கு வெளியேயான அத்தகைய அமைவிடத்திலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின், தூதரகத்தின் அல்லது காவற்றூதலுவலகத்தின் எவரேனும் இராஜதந்திர அலுவலருக்கு பொருளளவில் இச்சட்டக்கோவைக்கான இரண்டாம் அட்டவணையின் படிவ இல. 24 இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்தில் ஆணையொன்றை வழங்குதல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ) வின்கீழ் வழங்கப்பட்ட ஆணை, அத்தகைய இராஜதந்திர அலுவலருக்குச் சேர்ப்பிக்கப்படுவதற்குப் பதிவஞ் சல், விரைதூதர் சேவை அல்லது இலத்திரனியல் வழிவகைகள் என்ற வகையாக இணைப்பிரதிகளில் வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

இலங்கைக்கு வெளியே ஆணையாளரினால் செய்யப்பட வேண்டிய சத்தியம் அல்லது மொழியப் பட வேண்டிய உறுதியுரை

**273உ.** ஆணையாளரொருவராக மற்றும் நீதிமன்ற அலுவலரொருவராக நியமிக்கப் பட்ட ஆளொவ்வொருவரும்-

(அ) சமாதான நீதிவானொருவர் முன்னர் பொருளளவில் இச்சட்டக் கோவைக்கான இரண்டாம் அட்ட வணையின் படிவ இல. 25 இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய படிவத்தில் சத்தியமொன்றைச் செய்து கையொப்பமிடுதல் வேண்டும் அல்லது உறுதியுரையொன்றை மொழிந்து கையொப்பமிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய சத்தியத்தின் அல்லது உறுதி யுரையின் பிரதியொன்றை இலத்திரனியல் அஞ்சல்மூலம் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதியினால் அல்லது நீதிவானால் பணிக்கப்பட்டவாறான வேறெவையேனும் இலத்திரனியல் வழிவகைகள்மூலம் மற்றும் ஆணையைப் பூர்த்திசெய்தபின்னர் உட்பிரிவு 273ஞ இல் குறித்துரைக்கப்பட்ட அறிக்கையுடன் மூலப்பிரதியை நீதிமன்றத் துக்கு உடனடியாகத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

தேதி, நேரம் முதலியவற்றை நிர்ணயித்தலும் சாட்சிக்கு அறிவித்தலும்

**273ஊ.** (1) சமவாயத்துக்குரிய கட்புல- செவிப் புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் சான்றைப் பதியுமாறு மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் பணிக்குமிடத்து, அவர், ஆணையாளருடனான அல்லது எவரேனும் நீதிமன்ற அலுவலருடனான மற்றும் திறத்தவர்களுடனான கலந்தாலோசனையுடன், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப் பினூடாக ஒரு சாட்சியை விசாரணை செய்வதற்கான தேதி யையும், நேரத்தையும், அமைவிடத்தையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(2) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் சான்றை அழைக்கின்ற எவரேனும் திறத்தவர்,

ஆயத்தஞ்செய்வதற்காகவும் எவ்விடத்துக்கு வருகைதருதல் ஏதேனுமிருப்பின் அது தேவைப் படுகின்றதோ அவ்விடத்துக்குப் பயணிப்ப தற்காகவும் அவருக்கு நியாயமானவொரு காலத்தை அனுமதித்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட தேதி யையும், நேரத்தையும், அமைவிடத்தையும் சாட்சிக்கு அறிவித்தல் வேண்டும்.

அழைப்புக் கட்டளை சேர்ப்பித்தல்

**273எ.** (1) இலங்கையில் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் சான்றை அழைக்கின்ற எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின்மேல், மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், அத்தியாயம் V இல் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அல்லது விரைதூதர் சேவையொன்றின்மூலம் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதியினால் அல்லது நீதிவானால் பணிக்கப்பட்ட வேறெவையேனும் இலத்திரனியல் வழிவகைகள் மூலம் அத்தகைய சாட்சிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கும்படி பணிக்கலாம்.

(2) இலங்கைக்கு வெளியே சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளிக்கின்ற எவரேனும் சாட்சிக்கான அழைப்புக்கட்டளை விரைதூதர் சேவையின் மூலம் அல்லது நீதிமன்றத்தினால் பணிக்கப் பட்ட எவையேனும் இலத்திரனியல் வழிவகை களின்மூலம் சேர்ப்பிக்கவும்படலாம்.

(3) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒன்றில் சான்றளிப்பதற்கு அல்லது ஆவணங்களைக் காண்பிப்பதற்கு எச்சாட்சியொருவரின் வருகை தேவைப்படு கின்றதோ அச்சாட்சிக்கு வழங்கப்பட்ட அழைப்புக்கட்டளை, ஆவணம் ஏதேனுமிருப்பின் அதனுடன்சேர்த்து, தொலைவுப்புள்ளியின் தேதி யையும், நேரத்தையும், இடத்தையும் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டக்கோவைக்கான அத்தியாயம் V இன் ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகுதலும் வேண்டும்.

சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சிக்கு உதவுவதற்கு நீதிமன்றம் அவசியமான நியமனங்களைச் செய்யலாம் மற்றும் வேறு கட்டளைகளையும் ஆக்கலாம்

**273ஏ.** (1) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், ஒரு திறத்தவரினால் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீது, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக விசாரணை செய்யப்படவுள்ள சாட்சியொருவருக்கு உதவுவதற்குப் பின்வரும் ஆட்களுள் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரை நியமிக்கலாம்:-

(அ) விசாரணைசெய்யப்படவுள்ள சாட்சி நீதிமன்ற மொழியுடன் பரிச்சயமாக விராதவிடத்து ஒரு தகைமைபெற்ற மொழிபெயர்ப்பாளர்;

(ஆ) விசாரணைசெய்யப்படவுள்ள சாட்சிக்குக் காது கேட்டலில் அல்லது பேச்சில் குறைபாடிருக்குமிடத்து ஓர் உரைபெயர்ப்பாளர்;

(இ) விசாரணைசெய்யப்படவுள்ள ஆள் கட்புலக் குறைபாடுள்ளவராக இருக்குமிடத்து ஆவணங்களை வாசிப்பதற்கான ஒரு நிபுணர்; அல்லது

(ஈ) விசாரிக்கப்படவுள்ள சாட்சி, தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக ஓர் உள அல்லது உடல் இயலாமையினால் பீடிக்கப்பட்டுள்ளவிடத்து ஓர் உரைபெயர்ப்பாளர் அல்லது மொழி பெயர்ப்பாளர் அல்லது விசேட பயிற்சிபெற்ற கல்வி புகட்டுநர்:

ஆயின், அத்தகைய மொழிபெயர்;ப்பாளர், நிபுணர், உரைபெயர்ப்பாளர் அல்லது கல்விபுகட்டுநர், ஒரு மொழிபெயர்ப்பாளராக, நிபுணராக, உரைபெயர்ப்பாளராக அல்லது கல்விபுகட்டுநராக அவரது கடமைகளைப் புரிவதற்குத் தகைமைபெற்றவரென மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் திருப்திப்படுதல் வேண்டும்.

(2) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், சட்டத்தரணியொருவராக இருக்கவேண்டிய தொலைவுப்புள்ளியிலுள்ள அவதானிப்பாளரொருவரை அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள சாட்சியொருவரை விசாரணைசெய்யும் விடயத்தில் அத்தகைய அமைவிடத்தில் ஒரு சட்டத்தரணியாக அல்லது ஒரு சத்தியங்களுக்கான ஆணையாளராகத் தொழில்புரிவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற அத்தகைய எவரேனுமாளை நியமிப்பதற்கு மற்றைய திறத்தவரை அனுமதிக்கலாம்.

(3) இலத்திரனியல் ஆவணங்களுட்பட ஆவணங்கள் பயன்படுத்தப்படவிருப்பின், கேட்புக்கு முன்னர் அல்லது கேட்பின்போது அத்தகைய ஆவணங்களை விதிமுறைப்படப் பகிர்வதற்கும் முன்வைப்பதற்குமான தோதான ஊடகமொன்று திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்டு ஒழுங்கேற்பாடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், திறத்தவர்கள் உடன்படமுடியாதிருப்பின் மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் அவசியமான கட்டளைகளை ஆக்கலாம்.

சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையிலான பங்குபற்றுநர்கள்

**273ஐ.** (1) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் வேறுவகையாகப் பணித்தாலொழிய, நீதிமன்றப் புள்ளியிலான வழக்குநடவடிக்கைகள், ஏதேனும் உடன் கேட்பைப் போன்று பகிரங்கமாக நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் திறத்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் அவர்களின் சட்டத்தரணிகள் உட்பட்ட எல்லா ஆட்களும், நீதிமன்றப் புள்ளியில் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையில் பங்குபற்றுவதற்கு உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

(2) பின்வரும் ஆட்கள், தொலைவுப் புள்ளியில் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையில் பங்குபற்றுவதற்கு உரித்துடையோராதல் வேண்டும்:-

(அ) ஆணையாளர், மற்றும் அவசியமான விடத்துத் தொழினுட்ப அலுவலரொருவர்;

(ஆ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒன்றில் சான்றளிப்பதற்கு அல்லது ஆவணங்களைக் காண்பிப்பதற்கு அவரது வருகை தேவையாகவுள்ள சாட்சி;

(இ) மொழிபெயர்ப்பாளர், உரைபெயர்ப்பாளர் அல்லது நிபுணர் அல்லது சாட்சியொருவரின் விசாரணைத் தேதியையும் நேரத்தையும் முடிபுசெய்யும் போது நீதிமன்றப் புள்ளியில் நீதிபதியினால் அனுமதிக்கப்பட்ட வேறெவரேனுமாள்; அத்துடன்

(ஈ) மேல் நீதிமன்ற நீதிபதியினால் அல்லது நீதிவானினால் அனுமதிக்கப்பட்ட அவதானிப்பாளரொருவர்.

ஆணையாளரினதும் நீதிமன்ற அலுவலரினதும் கடமைகள்

**273ஒ.** (1) நீதிமன்ற அலுவலர், மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவானின் பணிப்பின்மீது, எல்லாத் திறத்தவர்களினதும் கலந்தாலோசனையுடன், ஆணையாளர், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக அட்டவணைப்படுத்தப்பட்ட கேட்புக்குப் போதிய முறையில் முற்கூட்டியே, சாட்சியின் தொலைவு விசாரணைக்கு தேவைப்படுகின்றவையும் திறத்தவர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்டவையுமான இயைபான ஆவணங்களினவாக இயை பான நீதிமன்றத்தின் பதிவாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை ஆணையாளர் பெற்றுள்ளாரென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், விசாரணைக்காக சமகாலத்துக்குரிய கட்புல- செவிப்புல இணைப்பைப் பயன்படுத்துவதன்மூலம் சட்டத்துக்கிணங்க ஆவணங்களைக் காண்பிப்பதற்கான தடுப்பொன்றாக அல்லது தடையொன்றாகக் கருதப்படுதலாகாது.

(3) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகத் தொலைவுப்புள்ளியில் சாட்சியொருவரை விசாரணைசெய்யும்போது, தொலைவுப் புள்ளியிலுள்ள சாட்சிக்கு ஆவணமொன்றைக் காண்பித்தல் அவசியமாக விருப்பின், மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் ஏற்புடையனவான எழுத்திலான சட்டத்துக்கும் நடைமுறைக்கும் அமைய, பின்வரும் முறையில் ஆவணமானது சாட்சிக்குக் காண்பிக்கப்படுவதனை அனுமதிக்கலாம்:-

(அ) ஆவணமானது நீதிமன்றத்தில் அல்லது நீதிமன்றம் அமருகின்ற வேறு புள்ளியில் இருப்பின், அத்தகைய ஆவணத்தின் பிரதியொன்று, இலத்திரனியல் அஞ்சல்மூலம் அல்லது ஓர் ஆவணக் காட்சிக்கருவியை அல்லது வேறெவையேனும் இலத்திரனியல் வழிவகைகளைப் பயன்படுத்துவதன்மூலம் சாட்சிக்குக் காண்பிக்கப்படுவதற்கு இலத்திரனியல்ரீதியில் தொலைவுப்புள்ளியிலுள்ள ஆணையாளருக்குக் கடத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) சாட்சி எத்தொலைவுப்புள்ளியில் சான்றளிக்கின்றாரோ அத்தொலைவுப்புள்ளியில் ஆவணமானது இருப்பின், அத்தகைய ஆவணத்தின் பிரதி, இலத்திரனியல் அஞ்சல்மூலம் அல்லது ஓர் ஆவணக் காட்சிக்கருவியை அல்லது வேறெவையேனும் இலத்திரனியல் வழிவகைகளைப் பயன்படுத்துவதன்மூலம் இலத்திரனியல்ரீதியில் நீதிமன்றப் புள்ளிக்கு அல்லது வேறு

இடத்துக்குக் கடத்தப்படுதல் வேண் டும்:

ஆயின், அத்தகைய ஆவணத்தின் வன்பிரதி பதிவஞ்சல்மூலம் அல்லது விரை தூதர்மூலம் நீதிமன்றப்புள்ளிக்கு அடுத்துப் பின்னர் கடத்தப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளரானவர், நீதிமன்ற அலுவலரின் ஒருங்கிணைப்புடன் அவசியமான எல்லாச் செயல்முறை ஒழுங்கேற்பாடுகளையும் செய்வதற்கும், சாட்சி வருகைதருவதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றையும் அதனோடு சம்பந்தப்பட்ட கருமங்களையும் பெற்றுக்கொள்வதில் நீதிமன்றத்தின் உதவி ஏதேனுமிருப்பின் அதற்காக ஏதேனும் மேலதிகக் கோரிக்கையைச் செய்வதற்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(5) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவானால் விடுக்கப்பட்ட எல்லாப் பணிப்பு களும் ஒரு சாட்சியின் விசாரணையின்போது இணங்கியொழுகப்படுவதனை உறுதிப்படுத்து வதும், நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அல்லது மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவானின் அங்கீகாரத்துடன் வழங்கப்பட்ட உபாயம் தவிர்ந்த வேறேதேனும் உபாயம் அத்தகைய விசாரணையின்போது பயன் படுத்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவதும் ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(6) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசா ரணையொன்றின் ஏதேனும் கட்புல அல்லது செவிப்புலப் பதிவு அதிகாரமளிக்கப்படாத எவரேனும் ஆளினால் செய்யப்படுவது தடை செய்யப்படுதல் வேண்டும். எவரேனும் திறத்தவர் அல்லது பிரதிநிதி அத்தகைய விசாரணையில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுமிடத்து, மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் தோதானவொரு விடயத்தில், அத்தகைய பதிவெதுவும் செய்யப்படுதலாகாதென ஆணையாளருக்குப் பொறுப்பேற்பொன்று

செய்யப்படுதல் வேண்டுமெனத் தேவைப் படுத்தலாம்.

சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் விசாரணை யொன்றினைப் பதியும்போது எடுக்கப்பட வேண்டிய இடர்காப்புகள்

**273ஓ.** (1) (அ) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான், ஆணையாளரின் உதவியுடன், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக விசாரணை செய்யப்படவேண்டிய ஆளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதலும், இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள சாட்சியொருவரின் விசாரணைக்காக நீதிமன்றத்தின் சட்டம், செயல்முறை மற்றும் நடவடிக்கைமுறைக்கிணங்க ஒரு சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுதலும் வேண்டும்.

(ஆ) இச்சட்டக்கோவையின்கீழ் கட்புல-செவிப்புல இணைப்பின்மூலம் சான்றளித்து இலங்கைக்கு வெளியே ஆளொருவரினால் செய்யப்பட்ட சத்தியம் அல்லது மொழியப்பட்ட உறுதியுரை மற்றும் இலங்கைக்கு வெளியே அத்தகைய ஆளினால் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது அளிக்கப்பட்டு உடன் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றாக அளிக்கப்பட்ட ஒரு கூற்று, அவ்வாள் இலங்கையில் அல்லது வேறு இடத்தில் நீதிமன்றத்தில் மற்றும் இலங்கையில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தின்கீழ் நீதிமன்ற அவமதிப்புத் தவறைக் கையாளுகின்ற நோக்கத்துக்காகச் சான்றளிப்பதனைப் போன்று அதேமுறையில் அளிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சியொருவரின் விசாரணையானது திறந்த நீதிமன்றத்தில், எழுத்தில், நீதிவானினால் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதியினால், நீதிபதி அமருகின்றவராகவுள்ள, சாட்சியின் உடன் விசாரணையைப்போன்று நீதிமன்றப்

புள்ளியில் அல்லது அவரது சமுகத்திலும் அவர் கேட்கக்கூடியதாகவும் அவரது தனிப்பட்ட பணிப்பின்கீழும் மேற்பார்வையின்கீழும் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய விசாரணை, நீதிபதி அமருகின்ற வராகவுள்ள நீதிமன்றப்புள்ளியில் மட்டுமே இலத்திரனியல்ரீதியில் பதியப்படுதலும் வேண்டும்.

(3) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் விசாரணையானது, நீதிமன்றத்தின் வேலை மணித்தியாலங்களின்போது வழமையாக இடம்பெறுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், சூழ்நிலைகள் எழக்கூடியவாறு கட்புல-செவிப்புல நேரங்கள் தொடர்பாக நீதிமன்றம் பொருத்தமான பணிப்புகளை விடுக்கலாம்.

(4) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, நீதிமன்றப்புள்ளி அல்லது தொலைவுப்புள்ளி, ஒரு விதிமுறைப்பட்ட நீதிமன்ற அமர்வாக விருத்தல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றம் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பின்மூலம் ஒரு சாட்சியின் விசாரணை தொடர்பான வரைவாவணங்களை விதித்து 453 ஆம் பிரிவின்கீழான விதிகளை ஆக்கலாம்.

நீதிமன்றத்தின் வழமையான செயல்முறைக் கிணங்க சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் விசாரணை

**273ஔ.** (1) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் விசாரணை, இயலுமானவரை ஆகக்கூடிய அளவுக்கு, திறந்த நீதிமன்றத்தில், நீதிமன்றத்தின் வழமையான செயல்முறைக்கிணங்க நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பின்மூலம் சான்றைப் பெறுவதற்கு ஏற்பாடுசெய்கின்ற (14 ஆம்

அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டம், இச்சட்டக்கோவை, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டம் என்பன இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் காணொளி-இணைப்புத் தொழினுட்பவியலின்மூலம் உருவாக்கப்பட்ட மாற்றமடைந்த சூழலையும் பங்குபற்றுநர்களின் புவியியற்சார் தனிவேறாக்கலையும் கருத்திற்கொண்டு, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் விசாரணை, ஒரு நியாயமான விளக்கத்தை நடாத்துவதற்குத் திறத்தவர்களுக்குள்ள உரிமைகளுடன் தலையிடமாட்டாதென்பதனை உறுதிப்படுத்துவதற்குத் திறத்தவர்களினாலான விண்ணப்பத்தின்மேலாயினுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, தோதான பணிப்புகளை விடுக்கலாம்.

கட்புல-செவிப்புல இணைப்பின் முறிவு

**273க.** (1) தொழினுட்பவியற்சார் பிழை காரணமாக சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடான கேட்பின் போது இடையீடொன்று ஏற்படுமிடத்து, நீதிமன்ற அலுவலரும் ஆணையாளரும் தொடுப்பை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கும் மீட்டெடுப்பதற்கும் எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்

(2) ஆணையாளர், தொலைவுப் புள்ளியிலுள்ளசாட்சி அத்தகையஇடையீட்டின்போது ஏனைய பங்குபற்றுநர்களுடன் தொடர்பு கொள்ளாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் சாட்சியானவர் ஏனைய பங்குபற்றுநர்களுடன் தொடர்பாடுவதனைத் தவிர்ப்பதற்கும் அத்தகையஇடையீட்டின்போது இயன்றளவுவரை அவர்களின் நடமாட்டத்தை

வரையறுப்பதற்குமான எல்லா நடபடிகளையும் அவர் எடுத்துள்ளாரெனத் தொடுப்பை மீட்டெடுத்த பின்னர் உடனடியாக நீதிமன்றப் புள்ளியிலுள்ள மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அல்லது நீதிவானுக்கு அறிவித்தலும் வேண்டும்.

(3) (அ) சமகாலத்துக்குரிய கட்புல- செவிப்புல இணைப்பொன்று வழக்குநடவடிக்கைகளின் போது முறிவடைந்தால் மற்றும் ஏதேனும் தொழினுட்பவியற்சார் பிழையை உடனடியாக நிவர்த்தி செய்ய முடியாதிருந்தால், நீதிமன்றம், வழக்கு நடவடிக்கையை ஒத்திவைக்கலாம் அல்லது வழக்குநடவடிக்கைகளை இடைநிறுத்துதலும் மீள அட்டவணைப்படுத்துதலும் உட்பட, சூழ்நிலை களில் தோதானவாறான அத்தகைய வேறு கட்டளைகளை ஆக்கலாம்.

(ஆ) அத்தொழினுட்பவியற்சார் பிழையானது, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப் பினூடாக ஒரு சாட்சியின் விசாரணையைப் பங்கமானமுறையில் பாதித்துள்ளதென மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் தாமாகவே அல்லது ஆணையாளரின் கோரிக்கையின்பேரில் அல்லது அத்தகைய கேட்பின்பின்னர் உடனடியாகச் செய்யப்பட்ட திறத்தவரொருவரின் விண்ணபத்தின்மீது திருப்திப்படின், அவர் உடனடியாகக் கேட்பை இல்லாதாக்கலாமென்பதுடன் ஒன்றில் கேட்பைப் புதிதாக நடாத்தலாம் அல்லது நேரடியான கேட்பு நீதிமன்றத்தில் நடாத்தப் படவேண்டுமெனப் பணிக்கலாம்.

(4) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பு முறிவடைந்தமை காரணமான ஒத்திவைப்பின் விடயத்தில், மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் நீதியாகவிருக்கக்கூடியவாறு செலவு தொகைகள் பற்றிய அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(5) இப்பிரிவின் நோக்கத்துக்காக-

"குறைவான கட்புல-செவிப்புலத் தரம்" என்பது, பெறப்பட்ட படத்தின் குறைபாடுற்ற தரம் அல்லது ஒலி என்று பொருளாகும்;

"தொழினுட்பவியற்சார் பிழை" என்பது, மந்தமான கடத்துகை வேகங்களை அல்லது குறைவான கட்புல-செவிப்புலத் தரத்தை விளைவிக்கின்ற ஏதேனும் அமைவிடத்தில் அல்லது சேவை வழங்குநர்களுடன் ஏதேனும் சாதன அல்லது வலையமைப்பு முறிவை அல்லது பிழையை உள்ளடக்கும்.

நீதிபதிகளின் தத்துவமும் அதிகாரமும் ஆணையாளரின், நீதிமன்ற அலுவலரின், சட்டத்தரணியின் மற்றும் சாட்சியின் சிறப்புரிமைகள் முதலியனவும்

**273ங.** (1) நீதிமன்றப்புள்ளியில் நீதிமன்ற மொன்றின் வழக்குநடவடிக்கையில் நீதிமன்றப்புள்ளியில் தலைமைதாங்குகின்ற அல்லது நீதிமுறையில் செயலாற்றுகின்ற ஒரு மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஆளொருவரிடமிருந்து சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக சான்று எடுக்கப்படுதல் சம்பந்தமாக மேல் நீதிமன்ற நீதிபதியொருவரை அல்லது நீதிவானைப் போன்று அதே தத்துவத்தையும் அதிகாரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆணையை வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவானுடனும் நீதிமன்ற அலுவலருடனும் ஒருங்கிணைவதற்கும் இணைவதற்கும் அந்நீதிமன்றத்தினால் உரியமுறையில் வழங்கப்பட்ட ஓர் ஆணையின்மீது செயலாற்றுகின்ற ஆணையாளரொருவர் மற்றும் நீதிமன்ற அலுவலர் இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஆளொருவரிடமிருந்து

சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக சான்று எடுக்கப்படுதல் சம்பந்தமாக, நீதிமன்ற ஆணையாளரொருவரை அல்லது நீதிமன்ற அலுவலரொருவரைப்போன்று அதே சிறப்புரிமைகளையும், பாதுகாப்பையும், விடுபாட்டுரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சட்டத்தரணியொருவர், சமகாலத்துக் குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக திறத்தவரொருவருக்கான அத்தகைய தோன்று தலுக்கிணங்க, அத்தகைய நீதிமன்றத்தில் அல்லது அதற்குமுன்னர் ஒரு திறத்தவருக்காகத் தோன்றுவதில் ஒரு சட்டத்தரணியைப்போன்று அதே சிறப்புரிமைகள், பாதுகாப்பு மற்றும் விடுபாட்டுரிமையைக் கொண்டிருத்தல் வேண் டும்.

(4) தொலைவுப்புள்ளியிலுள்ள நீதிமன்ற மொன்றிலான ஒரு வழக்குநடவடிக்கையில், ஒன்றில் இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ சாட்சியொருவராகத் தோன்றுகின்ற ஆளொருவர், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக சாட்சியொருவராகச் சான்றளித்தல் சம்பந்தமாக, அத்தகைய நீதிமன்றத்திலான அல்லது அதற்கு முன்னரான ஒரு வழக்குநடவடிக்கையில் சாட்சியொருவரைப் போன்று அதே பாதுகாப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சான்றைப் பெறுவதற்காக அல்லது சமர்ப்பணங் களைச் செய்வதற்காகக் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பைப் பயன்படுத்து வதற்கான செலவுகள்

**273ச.** (1) ஒரு தொலைவுக்கேட்பின் எல்லாச் செலவுகளும், மற்றைய திறத்த வரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் அவ தானிப்பாளருக்கான செலவுகள், அத்தகைய வேறு திறத்தவரின் சட்டக் கட்டணம் மற்றும் தொலைவுப்புள்ளிக்கு ஆவணங்களை அனுப்புவதற்கான செலவுகள் என்பனதவிர, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பை நாடுகின்ற திறத்தவரினால் பொறுக்கப்படுதல் வேண்டும்:

ஆயின்,சமகாலத்துக்குரியகட்புல-செவிப்புல இணைப்பினூடாக சான்றை எடுப்பதற்கான கட்டளை, நீதிமன்றத்தினால் தானாகவே ஆக்கப்படுமிடத்து, அத்தகைய கட்புல-செவிப்புலக் கேட்புக்கான செலவுதொகைகள், செலவுகளைப் பொறுப்பதற்குத் திறத்தவர்கள் உடன்பட்டாலொழிய, நீதிமன்றத்தினால் எதிர்கொள்ளப்படலாம்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தினால் தொழி னுட்பவியல் உடன்-நீதிமன்ற அறை தாபிக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது வேறு சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புலத் தொழினுட்பச் சேவைகள் ஏதேனும் நீதிமன்றத்துக்கு நிரந்தரமாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளவிடத்து, நீதிமன்றம், நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்பட்ட விதிகள் அல்லது சுற்றறிக்கைகளுக்கமைய, ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில், இலங்கையில் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புலச் செயலிடத்தின் பாவனைக்கான செலவுதொகைகளை இல்லாதாக்கலாம்.

(3) செலவுதொகையைக் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக நீதிமன்றத்தினால் ஆக்கப்படமுடியுமான கட்டளைகள் எவ்வாறிருப்பினும், நீதிமன்றம், ஆவணத்தின் எண்பிப்புப்பற்றிய சான்று நெறிப்படுத்தப்பட்டபின்னர், ஆவணத்தை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், ஆவணத்தைக் குற்றத்துக்குட்படுத்துவதற்கு நாடிய திறத்தவர், நீதிமன்றம் நற்காரணத்துக்காக வேறுவகையாகப் பணித்தாலொழிய, வரிச் செலவுதொகையுடன்சேர்த்து மேலதிகமாக ஆவணத்தை எண்பிப்பதில் உறப்பட்ட செலவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

ஆணையைத் திருப்பி யனுப்புதல்

**273ஏ.** (1) ஆணையானது உரியமுறையில் நிறைவேற்றப்பட்டபின்னர், ஆணையாளரினால் அவரது பெயருடன் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான அவரது அறிக்கையுடனும் மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவானால் விடுக்கப்பட்ட எல்லாப் பணிப்புகளுக்கும் இணங்கியொழுகுவதற்கு அவரினால் எடுக்கப்பட்ட நடபடிகளுடனும் 273ஆ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மூலச் சத்தியக்கடுதாசியுடன்சேர்த்து ஆணையை வழங்கிய நீதிமன்றத்துக்கு அவரினால் திருப்பியனுப்பப்படுதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய அறிக்கையும் சத்தியக் கடுதாசியும் பதிவேட்டில் கோப்பிடப்படுதலும் வேண்டும்.

(2) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பொன்றைப் பயன்படுத்தி மேற்கூறப்பட்ட முறையில் பதியப்பட்ட சான்று, (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையும் சத்தியக் கடுதாசியும் நீதிமன்றத்துக்குப் பதியப்பட்டாலொழியவும் பதியப்படும்வரையும் சான்றாக ஏல்தகவுடையதாதலாகாது:

ஆயின், தொலைவுப்புள்ளியில் ஆணையாளரொருவரின் நியமனமின்றி நெறிப்படுத்தப்பட்ட சான்றுதவிர, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பைப் பயன்படுத்தி மேற்கூறப்பட்ட முறையில் பதியப்பட்ட சான்று, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பிடப்பட்ட அறிக்கையும் சத்தியக்கடுதாசியும் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டாலொழியவும் சமர்ப்பிக்கப்படும்வரையும் சான்றாக ஏல்தகவுடையதாதலாகாது.

தொலைவுச் சாட்சியின் அறிக்கையினது எழுத்துப் படிவங்களும் காணொளிப் பதிவின் சான்றுப்படுத்தப்பட்ட எழுத்துப் படிவங்களுக்கான கோரிக்கைகளும்

**273ட.** (1) பிரிவு 273ஔ இன் ஏற்பாடுகளுக்கமைய, சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு சாட்சியின் விசாரணையில் பதியப்பட்ட சான்று, சான்றுரையின் அலுவலக முறையான பதிவேடாக வருதல் வேண்டும்.

(2) உள்மறைவான பிரதான பிரதி, நீதிமன்ற எண்ணிமத் திசைவியில் தனிவேறாகப் பதிவேட்டின் பாகமாகப் பதிவாளரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் உள்மறைவான பின்னணிப் பிரதி வேறேதேனும் வெளிப்புறக் காப்பான அமைவிடத்தில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(3) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல பதிவின் போது ஏதேனும் சிறப்புரிமைகொண்ட தொடர்பாடல் இடம்பெற்றுள்ளதெனத் திறத்தவரொருவர் கோரு மிடத்து, நீதிமன்றமானது அது தொடர்பாகத் தோதான பணிப்புகளை விடுத்தல் வேண்டும்.

(4) திறத்தவரொருவர், விண்ணப்பத்தின்மீது நீதிமன்றத்தில் வைத்திருக்கப்பட்ட சமகாலத்துக் குரிய கட்புல-செவிப்புலப் பதிவின் மேம்படியைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படலாம் என்பதுடன் அத்தகைய விண்ணப்பமானது, மேம்படி, பதிவாளரின் அல்லது தொழினுட்ப அலுவலரின் சமுகத்தில் மட்டுமே பார்வை யிடப்படலாம் என்பதுட்பட்ட கண்டிப்பான நிபந்தனைகளுக்கமைய, விடயம் விடயமாக என்ற அடிப்படையில் மேல் நீதிமன்ற நீதிபதியினால் அல்லது நீதிவானால் மட்டுமே முடிபு செய்யப்படுதலும் வேண்டும்.

(5) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புலப் பதிவின் மேம்படியினது அல்லது பின் னணிப் பிரதியினது பிரதியெதுவும் எவரேனும் திறத்தவருக்கு நீதிமன்றத்தினால் வழங்கப்படுதலாகாது.

அமைவிடம் அல்லது வளவுகள் நீதிமன்றத்தின் பாகமாகக் கருதப்படுதல்

**273ண.** (1) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் வழக்குநடவடிக்கையில் சான்றளிக்கும் நோக் கத்துக்காக இலங்கையினுள்ளான எந்த இடத்தில் அல்லது இலங்கைக்கு வெளியேயான எந்த இடத்தில்சமகாலத்துக்குரியகட்புல-செவிப்புல இணைப்பு பயன்படுத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் இடம், இச்சட்டத்தின்கீழான வழக்கு

நடவடிக்கைகளை நடாத்தும் நோக்கத்துக்காக ஒரு நீதிமன்ற அறையில் அல்லது வேறு இடத்தில் அமருகின்ற இலங்கையிலுள்ள நீதிமன்றத்தின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தொலைவுப்புள்ளியில் புரியப்பட்ட ஏதேனும் தவறு, இலங்கையில் வலுவிலுள்ள சட்டங்களின் நோக்கங்களுக்காக நீதிமன்றம் அமருகின்ற நீதிமன்ற அறையில் அல்லது வேறு இடத்தில் புரியப்பட்டுள்ளதாகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன் சான்று, நடவடிக்கைமுறை, நீதிமன்ற அவமதிப்பு அல்லது பொய்ச்சான்றளித்தல் தொடர்பான சட்டங்கள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(3) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாக ஒரு நீதிமன்றத்தினால் நடாத்தப்பட்ட எல்லா வழக்கு நடவடிக்கைகளும் நீதிமுறை வழக்குநடவடிக்கைகளாதல் வேண்டுமென்பதுடன் ஓர் உருப்படியான நீதிமன்றத்துக்கு ஏற்புடையற்பாலனவான எல்லா நயநாகரிக நடைகளும் செயல்முறைகளும், ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளிலான வரைவாவணங் களுட்பட, இந்த வழக்குநடவடிக்கைகளுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கட்புல-செவிப்புல இணைப்பினூடாக நிபுணச் சாட்சிகளை விசாரணை செய்தல்

**273த.** (1) மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் ஒரு நிபுணச் சாட்சியிடமிருந்து ஓர் அறிக்கையை அல்லது சான்றைக் கோருதல் வேண்டும்.

(2) (அ) நீதிவான், 148 ஆம், 397 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, தோதான சூழ்நிலைகளில், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்ற ளிப்பதற்கு அல்லது அறிக்கையொன்றைக்

காண்பிப்பதற்கு எவரேனும் நிபுணச் சாட்சியை அழைக்கலாம்.

(ஆ) மேல் நீதிமன்ற நீதிபதி, தோதான சூழ்நிலைகளில், சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சான்றளிப்பதற்கு அல்லது அறிக்கையொன்றைக் காண்பிப்பதற்கு எவரேனும் நிபுணச் சாட்சியை அழைக்கலாம்.

(3) விடயத்துக்கேற்ப, நீதிவான் அல்லது மேல் நீதிமன்ற நீதிபதி, இக்கோவையின் அத்தியாயம் V இல் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அல்லது விரைதூதர் சேவையொன்றின்மூலம் அல்லது வேறெவையேனும் இலத்திரனியல் வழிவகைகளின்மூலம் எவரேனும் நிபுணச் சாட்சியை அழைக்கலாம்.

(4) ஓர் அழைப்புக்கட்டளையைப் பெற்ற அத்தகைய எவரேனும் நிபுணச் சாட்சி அத்தகைய அழைப்புக்கட்டளை பெறப்பட்டமையை ஒப்புக்கொள்ளுதலும் அத்தகைய அழைப்புக்கட்டளையினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு இணங்கியொழுகுதலும் அவரது கடமையாதல் வேண்டும்.

(5) அறிக்கையொன்றை இலத்திரனியல் ரீதியில் சமர்ப்பிக்கும்படி மேல் நீதிமன்ற நீதிபதி அல்லது நீதிவான் நிபுணச் சாட்சிக்குக் கட்டளையிடுமிடத்து, அத்தகைய அறிக்கையானது, நீதிமன்றத்துக்கு அத்தகைய அறிக்கையைக் கடத்துமுன்னர், ஓர் இலத்திரனியல் கையொப்பத்தின்மூலம் மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) இலத்திரனியல் வழிவகைகளினூடாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையில் அடங்கியுள்ள நிகழ்வுகளானவை, வழக்குக்கான திறத்தவர்கள் அத்தகைய நிபுணச் சாட்சி நேரில் வருகைதருவதனைக் கட்டாயப் படுத்தாவிடின் மற்றும் தலைமைதாங்கும் நீதிபதி தோதானதெனக் கருதின், அத்தகைய நிகழ்வுகள்பற்றிய சான்றில் ஏல்தகவுடையனவாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக “நிபுணச் சாட்சி” என்பது, ஒரு நீதிமுறை மருத்துவ அலுவலரையும், ஒரு சட்ட மருத்துவ அலுவலரையும், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் ஓர் அலுவலரையும், ஒரு பல்கலைக்கழகத்திலுள்ள மருத்துவப் பீடமொன்றின் சட்ட மருத்துவத் துறையின் சட்ட மருத்துவ விசேட நிபுணரொருவரையும் உள்ளடக்கும்.

ஒழுங்கு விதிகள்

**273ந.** பிரிவுகள் 273அ முதல் 273த வரையிலானவற்றின் நோக்கங்களுக்காக (இரண்டுமுட்பட) பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் பின்வரும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஆளொருவர் சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பின் பாவனைமூலம் தோன்றவிருக்குமிடத்து, பயன்படுத்தப்படவேண்டிய சாதனங்களின் வகையையும் தொழினுட்பவியலின் முறையையும் செய்யப்படவேண்டிய ஒழுங்கேற்பாடுகளையும் விதித்துரைத்தல்;

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தை ஒரு பெயர் குறிக்கப்பட்ட தொழினுட்பவியல் உடன் நீதிமன்ற அறையாக வெளிப்படுத்துதல்;

(இ) சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பின் ஆகுசெலவையும், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே அத்தகைய வழக்குநடவடிக்கைகளுக்கு சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பை வழங்குவதற்காக எவரேனும் வெளிநாட்டுச் சேவை வழங்குநருக்குச் செய்யப்படவேண்டிய கொடுப்பனவு ஏதேனுமிருப்பின் அதனையும் விதித்துரைத்தல்; அத்துடன்

(ஈ) அதன் நிருவாகத்துக்கு அவசியமானவையும் அல்லது அதற்கு முழுப்பயனும் கொடுப்பதற்கு அவசியமானவையாக உள்ளவாறான இச்சட்டக்கோவையினால் உத்தேசிக்கப்பட்டவையுமான வேறெவையேனும் கருமங்களுக்காக ஏற்பாடுசெய்தல்.

பொருள் கோடல்

**273ப.** பிரிவுகள் 273அ முதல் 273ந வரையிலானவற்றின் நோக்கத்துக்காக (இரண்டுமுட்பட)-

"சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பு" என்பது, பின்வருவனவற்றை இயலச்செய்கின்ற ஏதேனும் தொழினுட்பவியற்சார் வசதி என்று பொருளாகும்:-

(அ) நீதிமன்றப்புள்ளியில் வழக்கு நடவடிக்கைகளில் பங்குபற்றுகின்ற ஆட்கள், சான்றளிக்கப்படுகின்ற தொலைவுப்புள்ளியில் அல்லது வேறேதேனும் அமைவிடத்தில் வழக்குநடவடிக்கைகளில் பங்குபற்றுகின்ற மற்றெல்லா ஆட்களையும் பார்த்தலும் கேட்டலும்; அத்துடன்

(ஆ) தொலைவுப்புள்ளியில் வழக்கு நடவடிக்கைகளில் பங்குபற்று கின்ற மற்றெல்லா ஆட்களும், நீதிமன்றப்புள்ளியில் அல்லது மற்றைய அமைவிடத்தில் வழக்கு நடவடிக்கைகளில் பங்கு பற்றுகின்ற ஆட்களைப் பார்த்தலும் கேட்டலும்;

“நீதிமன்றப்புள்ளி” என்பது, நீதிமன்றம் நேரடி யாக அமர்ந்து ஒன்றில் பாரம்பரிய வழிவகைகளின்மூலம் அல்லது சமகாலத்துக்குரிய கட்புல-செவிப்புல இணைப்பினூடாகச் சாட்சிகளின் சான்றைக் கேட்கின்ற நீதிமன்ற அறையை அல்லது வேறு இடத்தை உள்ளடக்கும்;

“இலத்திரனியல் வழிவகைகள்” என்பது, இலத்திரனியல், காந்த, ஒளியியல் அல்லது ஊடகத்தைப் பொருட்படுத்தாது வேறேதேனும் ஒத்ததன்மைமூலம் தகவல் அல்லது ஆவணம் தோற்றுவிக்கப்படும், அனுப்பப்படும், பெறப்படும் அல்லது தேக்கிவைக்கப்படும் ஏதேனும் முறை என்று பொருளாதல் வேண்டும்;

“நிபுணரின் அறிக்கை” என்பது, நிபுணரின் அபிப்பிராயத்தையும் அவ்வபிப்பிராயம் எந்த நிகழ்வுகளின்மீது உருவாக்கப்படுகின்றதோ அந்த நிகழ்வுகளையும் எடுத்துக்கூறு கின்றதும் கேட்பில் பிரதான சான்றாகச் சமர்ப்பிப்பதற்குக் கூற்றையளிக்கும் திறத்தவர் உட்கருதுகின்ற நிபுணரின் சான்றினது சாராம்சத்தைக்கொண்டுள்ளதும் நிபுணரொருவரினால் எழுத்திலானது மானவொரு கூற்றை உள்ளடக்கும்;

"அரசாங்க நிறுவனம்" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) அரசாங்கத்தின் சார்பில் நிறைவேற்று அல்லது நிருவாகப் பணிகளைப் பிரயோகிக்கின்ற ஏதேனும் அமைச்சு, திணைக்களம், மாகாண அமைச்சு அல்லது திணைக்களம் அல்லது பகிரங்கக் குழு; அல்லது

(ஆ) ஏதேனும் உள்ளூரதிகாரசபை அல்லது அலுவலகம், குழு அல்லது முகவராண்மை அல்லது உருவகம் அல்லது ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட வேறேதேனும் அரசாங்க முகவராண்மை அல்லது உருவகம்; அல்லது

(இ) அரசாங்கத்தினால் அல்லது மாகாணசபையினால் அல்லது உள்ளூரதிகாரசபையினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஏதேனும் மருத்துவமனை, சுகாதாரச் சேவை, சிகிச்சை நிலையம், தடுத்து வைத்தல் அல்லது திருத்தச் சேவைகள் நிலையம், சிறுவர் இல்லம் அல்லது புகலிட இல்லம், சிறுவர் பராமரிப்பு நிலையம், இளந்தவறாளர்கள் பயிற்சிப் பாடசாலை, கட்டுக்காப்பு இல்லம், இயலாதோர் நிலையம், நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின்கீழான ஏதேனும் நிலையம் மற்றும் அரசாங்கத்தினால் அல்லது மாகாணசபையினால் அல்லது உள்ளூராட்சியினால் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட

அல்லது கட்டுப்படுத்தப்பட்ட சிறுவர்களை மற்றம் இளமாட் களை அல்லது இளந்தவறாளர் களைப் பாதுகாப்பதற்கான ஏதே னும் நிலையம்;

“அமைச்சர்” என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரை யின்கீழ் நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

“ஒரு தடுப்புக்காவல் இடத்திற்குப் பொறுப் பாகவுள்ள அலுவலர்” என்பது, இயைபான தடுப்புக்காவல் இடத்தின் நிருவாகம் மற்றும் கட்டுப்பாடு என்பன பொறுப்பிக்கப்பட்ட கண் காணிப்பாளர், முகாமையாளர் அல்லது வேறு அலுவலர் என்று பொருளாகும்;

“தடுப்புக்காவல் இடம்” என்பது, ஏதே னும் எழுத்திலான சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் தடுத்து வைத்தல் செயலிடம் என்று பொரு ளாகும் என்பதுடன் ஒரு பயிற்சிப் பாடசாலை, விளக்கமறியல் மனை, சந்தேகநபர்கள் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கான சான்றுப் படுத்தப்பட்ட பாடசாலை என்பவற் றையும் மற்றும் (222 ஆம் அத்தி யாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்களைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தின் கருத்துக்குட் பட ஒரு தனிமைப்படுத்தல் நிலையத் தையும் 2007 ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க, அவுடதங்களில் தங்கிவாழும் ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர் வாழ்வளித்தலும்) சட்டத்தின் கருத்துக் குட்பட ஏதேனும் சிகிச்சையளித்தல்

மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையத்தையும் உள்ளடக்குதலும் வேண்டும்

"பதிதல்" என்பது,-

(அ) தனியொரு உருவத்தை, ஒரு நடமாடுகின்ற உருவத்தை அல்லது ஏதேனும் ஒலியை; அல்லது

(ஆ) அதிலிருந்து தனியொரு உருவம், ஒரு நடமாடுகின்ற உருவம் அல்லது ஏதேனும் ஒலி தோற்றுவிக்கப்படக் கூடியதனை அல்லது மீளத் தோற்றுவிக்கப்படக்கூடியதனை,

ஏதேனும் ஊடகத்தின்மீது பதிதல் என்று பொருளாகும்;

"தொலைவுப்புள்ளி" என்பது, சமகாலக் கட்புல-செவிப்புல இணைப்பினூடாக விசாரணைசெய்யப்படவேண்டிய சாட்சி, நீதிமன்றப்புள்ளியில் வழக்கைக் கேட்கும் நீதிமன்ற நீதிபதியினால் வழங்கப்பட்ட ஆணையொன்றின்மீது அமைந்துள்ள இடம் அல்லது இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே அமைந்திருப்பினுஞ்சரி, சமகாலக் கட்புல-செவிப்புல இணைப்பினூடான வழக்குநடவடிக்கைகளுக்கான இடம் என்று பொருளாகும்;

"தொழினுட்பவியல் உடன் நீதிமன்ற அறை" என்பது, இக்கோவையின் 273ந ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழும் அவற்றின் நியதிகளின்படியும் பிரதம

நீதியரசரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் விடுக்கப்பட்ட பணிப்பு களுக்கிணங்க இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள வேறேதேனும் அமைவிடத்தில் அத்தகைய வேறு நீதிமன்ற வளவு களில் நடாத்தப்பட்ட அல்லது ஒலிபரப்பப்பட்ட வரிசைப்படுத்தப்பட்ட வழக்குநடவடிக்கைகளைப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் பொதுமக்களான உறுப் பினர்களை அல்லது நீதிமன்றப் பாவனையாளர்களை இயலச்செய்கின்ற வளவுகளாக இக்கோவையின் நோக் கங்களுக்காக அமைச்சரினால் வெளிப் படுத்தப்பட்ட நீதிமன்ற அறை என்று பொருளாகும்;

“கடத்துகை” என்பது, தனியொரு உருவத்தின், நடமாடுகின்றவோர் உருவத்தின் அல்லது ஏதேனும் ஒலியின் இலத்திரனியல் வழிவகை களின்மூலமான ஏதேனும் கடத்துகை என்று பொருளாகும்;

“ஓர் அரசாங்க நிறுவனத்தில் தொழிலுக் கமர்த்தப்பட்ட சாட்சி” என்பது, பின்வருவோர் என்று பொருளாகும்:-

(அ) வழக்குநடவடிக்கைகளில் அல்லது உத்தேசிக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் சான்றில் பயன் படுத்தப்படுவதற்காக நிபுண ரொருவரின் அறிக்கையை வழங்கு கின்றவரும் அல்லது வழக்கு நடவடிக் கைகளில் அபிப்பிராயச் சான்றை அளிப்பதற்கு நிபுணரொருவராக அழைக்கப்படுகின்றவரும் அரசாங்க நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவராகவுள்ளவரும்

அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளவரும் அல்லது அதனால் ஈடுபடுத்தப்பட்டுள்ள வருமான ஆளொருவர்;

(ஆ) சொல்லப்பட்ட அரசாங்க நிறுவனத்தின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் ஆவணமொன்றை அளிப்பதற்கு அல்லது சொல்லப்பட்ட அரசாங்க நிறுவனத்தின் ஆவணமொன்றை உறுதிப்படுத்துவதற்கு அழைக்கப்படுபவரான அவ்வரசாங்க நிறுவனத்தின் உறுப்பினரொருவர்; அல்லது

(இ) அரசாங்க நிறுவனத்தின் எவரேனும் ஊழியர் அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தின் எவையேனும் ஒழுங்குவிதிகளினால் அல்லது பணிப்புரைகளினால் விதித்துரைக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த வேறெவரேனும் சாட்சி.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை, அதன் படிவம் 23ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய படிவங்களை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது; இவை அவ்வட்டவணையின் படிவம் 24 மற்றும் படிவம் 25 என்பனவாகப் பயனுறுதல் வேண்டும்:-

**“இல. 24** [பிரிவு 273ஈ(3) (அ)]

**ஆணைக்கான படிவம்**

**இலங்கைத் தூதரகத்தின் /உயர்ஸ்தானிகராலயத்தின் /காவற்றூதலுவலகத்தின் இராஜதந்திர அலுவலரொருவருக்கான ஆணையை வெளிநாட்டில் சேர்ப்பிப்பதற்கான கோரிக்கை**

செயலாளர்
வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 01

| | |
|---|---|
| ஆணையை வழங்கிய நீதிமன்றம் | |
| வழக்கில: | |
| திறத்தவர்களின் பெயர்கள் | |
| வழக்கின் தன்மை: விண்ணப்பகாரரின் பெயரும் முகவரியும் | பெறுகின்ற அதிகாரியின் பெயரும் முகவரியும் |
| கோரிக்கை- இராஜதந்திர அலுவலருக்கு ஆணை சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்<br>நாடு<br>அமைவிடம்<br>முகவரி | |

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் பிரிவுகள் 273 (…….) மற்றும் 273 (……..) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க.

இணைக்கப்பட்ட ஆவணங்கள்:

| தேதி: | பதிவாளரின் கையொப்பமும் முத்திரையும் |
|---|---|
| ……………… தூதரகத்தின்/ உயர்ஸ்தானிகராலயத்தின்/ காவற்றூதலுவலகத்தின் இராஜதந்திர அலுவலராக உரிய முறையில் நியமிக்கப்படுவதற்காக ஆவணங்களுடன் சேர்த்து இணைக்கப்பட்ட ஆணையைச் சேர்ப்பிக்கும்படியும் சேர்ப்பிப்புப்பற்றிய ஒரு கூற்று இதன்மீது புறக் குறிப்பிடப்பட்டு, இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு ……….....…. நீதிமன்றத்துக்கு இப்படிவத்தின் பிரதியைத் திருப்பியனுப்பும்படியும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கோரப்படுகின்றார்.<br><br>புறக்குறிப்பு:<br><br>தேதி…………………… கையொப்பம்……………………… | |

**இல. 25** [பிரிவு 273உ (அ)]

### ஆணையாளரின் அல்லது நீதிமன்ற அலுவலரின் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை

…………. ஆகிய நான், உரியமுறையிலும் விசுவாசமாகவும் எனது ஆற்றல், அறிவு மற்றும் நியாயத்திற்கு எட்டியவரையும், பயமோ அல்லது அனுகூலமோ, பாசமோ அல்லது தீயஎண்ணமோ இன்றி …………… இலுள்ள……………. மேல் நீதிமன்ற நீதிபதியினால்/ நீதிவானான் விடுக்கப்பட்ட சட்டத்துக்கும்பணிப்புக்கும்இணங்கஆணையாளரொருவராக எனது பதவிக்குரிய கடமைகளைப் புரிந்துள்ளேன் என நான் பயபக்தியாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன் சத்தியஞ் செய்கின்றேன்.”.

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்